**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.6/19**

2023-ம் ஆண்டு ஜுன் திங்கள் 20 -ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.பெருமாள், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.பெருமாள், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.சோமசுந்தரம் |
| கிராமம் | - செய்யார் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

20.06.2023
வா.சா.1.
**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

தாவா எ.அட்டவணை சொத்து மகாராஜா என்பவர் வடக்கு தெற்கு 23 அடி, கிழக்கு மேற்கு 39 1/2 அடி, விக்டெரி தெரு பாதைக்காக விட்டுள்ளார் என்று என் தாவாவில் நான் கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. மகாராஜாவின் மூல ஆவணத்தில் அவருக்கு விற்பனை செய்த முனுசாமி என்பவர் அதை குறிப்பிட்டுதான் விற்பனை செய்துள்ளார். நான் மகாராஜா என்பவரின் மூலபத்திரத்தை பார்வையிட்டு சொத்தை கிரையம் பெற்றேனா என்றால் எனது கிரையதாரரின் மூல பத்திரங்களை பார்த்துதான் கிரையம் பெற்றேன்.தாவா 9வது பத்தியில் நான் மகாராஜா கிரையம் பெற்ற மூல ஆவணத்தை பார்வையிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றும், தற்போது அவரது கிரைய ஆவணத்தை பார்வையிடவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) மகாராஜா என்பவர் தனது கிரைய பத்திரத்தில் 680 சதுர அடி குறிப்பிட்டுதான் கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளை படித்து பார்த்தேன். தாவா எ-அட்டவணை சொத்து எனக்கு உரிமையானது என்றும், அந்த சொத்து எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்று மூல ஆவணங்கள் குறித்து எனது தாவாவில் குறிப்பிட்டுள்ளேன். நான் கிரையம் பெற்ற சொத்து ஆவணங்கள் நான் சொல்லி கிரைய அளவு எழுதப்பட்டதா அல்லது எனது கிரையதாரர் சொல்லி எழுதப்பட்டதா என்றால் எனது கிரையதாரர் அரசு ஆவணங்களின்படி பார்த்து சொல்லி அளவுகள் எழுதப்பட்டது. எனது கிரையதாரர் கொடுத்த கிரைய நிலம் அவர் சொல்லிதான் அளவுபடி பெற்றேனா என்றால் அளந்து பார்த்து சரியாக இருந்ததால்தான் கிரையம் பெற்று அதை எனது கிரைய ஆவணத்திலும் குறிப்பிட்டுள்ளேன்.

3) நான் கிரையம் பெற்றபோது அந்த சொத்தின் அளவு, கட்டிடத்தின் கடக்கால் அளவு, கட்டிடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மரம், அதில் பெற்றிருக்கும் மின் இணைப்பு, கழிவு நீர் சேகரிப்பு தொட்டி மற்றும் மூன்று பக்க சுற்றுசுவர் ஆகியவற்றின் அளவுகளை சரிபார்த்து அதற்கான கட்டணங்கள் செலுத்திதான் பதிவு செய்து கொண்டேன். கட்டிடத்தின் வயதையும் அறிந்து கொண்டேன். மேற்கண்ட சங்கதிகள் குறித்துதான் பத்திர பதிவு செய்துகொண்டேன். வா.சா.ஆ.1னுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு-1 அ-வில் குறிப்பிட்டுள்ள விவரங்கள்படிதான் கிரையம் பெற்றேன். அதேபோல் அதனுடன் இணைந்துள்ள இணைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள்தான் எனது சொத்தின் அளவு. எனக்கு கிரையம் கொடுத்த கிரையதாரர் மனைகளை அரசு அங்கீகாரம் பெறாமல்தான் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர் வீட்டு வசதி வாரியத்தில் கடன் பெற்றுதான் அந்த

இடத்தை வாங்கியிருந்தார். நான் மின்சார வாரியத்தில் கணக்கு மேற்பார்வையாளராக பணிபுரிகிறேன். மீட்டர் அளவுகளை சதுர அடி அளவுகளாக எவ்வாறு மாற்றம் செய்யும் விவரங்கள் குறித்து எனக்கு தெரியும். வா.சா.ஆ.1னுடன் இணைக்கப்பட்டுள்ள தாவா சொத்தின் வரைபடத்தில் சர்வே எண்.75/33ல் மேற்புற அளவு 11.4 மீட்டர் என்றும், சர்வே எண்.75/6 சி1ன் மேற்புற அளவு 11.4 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.75/6சி1 தெற்கு புறம் 10.2 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.76/6சி1 கிழக்கு புறம் 22.2 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.75/33 கிழக்கு புறம் 10.4 மீட்டர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சர்வே எண்.75/6சி1ல் மூன்று புறம் உள்ள சுற்றுசுவரின் அளவீடு செய்துதான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வடக்கிலும், கிழக்குலும் இருந்த சுற்றுசுவரின் அளவுகளை அளந்துதான் பத்திரம் பதிவு செய்துள்ளேன். அதை எனது கிரைய பத்திரத்திலும் குறிப்பிட்டுளளேன்.

4) நான் சொல்வது பொய் என்றும், எனது இணைப்பு 1அ-அட்டவணையில் நான் திசைகள் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றும் 44.4 ரன்னிங்மீட்டர் என்ற சுற்றுசுவர் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கிரைய ஆவணத்தை பதிலுரையில் குறிப்பிட்டுள்ளதை நான் பெற்று பார்த்தேனா என்றால் பதிலுரையை மட்டும்தான் படித்து பார்த்தேன். பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் 6வது பத்தியில் தாவா சொத்தில் அமைந்திருந்த மதில்சுவற்றை தெளிவுபடுத்தும் விதமாக புகைபடம் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அந்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை. மேற்படி பதிலுரையில் குறிப்பிட்ட ஆவணங்களை பார்க்கவேண்டும் என்று எனது வழக்கறிஞரிடமும் நான் கேட்கவில்லை.

5) பிரதிவாதி பதிலுரையில் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து குறித்த ஆவணம்தான் என்னிடம் காட்டப்படும் புகைபடங்கள். அந்த புகைபடத்தில் புதியதாக கட்டப்பட்டிருக்கும் வீடு பிரதிவாதியினுடைய வீடு மஞ்சள் நிறத்தில் கட்டப்பட்டிருக்கும் மாடி வீடு என்னுடையதுதான். இதற்கு இடையில் இருக்கும் சுற்றுசுவரைதான் பிரதிவாதி இடித்துவிட்டு என்னிடத்தில் கட்டியுள்ளார். புகைபடத்தில் இருக்கும் சுற்றுசுவர்தான் ஆரம்பத்தில் இருந்தது. அதை இடித்துவிட்டுதான் பிரதிவாதி என் இடத்தில் ஆக்கரமிப்பு செய்து கட்டியுள்ளார். புகைபடங்களில் காட்டப்படும் வெள்ளைநிற சுற்றசுவர்தான் பிரதிவாதியின் சுற்றுசுவர் என்றால் முழுவதுமாக சுற்றுசுவர் கட்டப்படவில்லை. 3ல் 1 பகுதிதான் கட்டப்பட்டிருந்தது. பின்னர் ஆரஞ்சு நிற சுற்றுசுவரை என்னிடத்தில் ஆக்கரமிப்பு செய்து கட்டிவிட்டார்.

6) தாவா தாக்கல் செய்தபோது தாவா சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டிருந்ததா என்றால் கட்டிட பணிகள் நடந்துகொண்டு இருந்தது. கட்டிட பணி நடந்துகொண்ட விவரம் குறித்து எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் 4வது பத்தியில் இதுகுறித்து குறிப்பிட்டுள்ளேன். அதில் மாடி கட்டிடம் வேளைகளை செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி கட்டிடத்தில் விவரம் குறித்தோ, மதிப்பு குறித்தோ எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சுற்றுசுவர் பற்றிதான் பிரச்சனை என்பதால் அதுகுறித்துதான் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி நான் கட்டிய இடத்தை ஏரையூர் சுகுமாரன் என்ற மேஸ்திரிதான் கட்டினார். பாண்டு என்பவர் வீட்டின் சுற்றுசுவரை இடித்தாரா என்றால் இடித்தார். அவர் சுகுமார் மேஸ்திரியின் கீழ் பணிபுரியும் நபர்தான். மேற்படி சுற்றுசுவர் இடிக்கப்பட்டபோது என்னிடம் பிரதிவாதி தகராறு செய்தாரா என்றால் இல்லை. பிரதிவாதிதான் அந்த இடத்தை இடித்துவிட்டார்.

7) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைபடங்களில் ஆலோபிளாக் கற்கள் வைத்து கட்டப்பட்டிருக்கும் சுற்றுசுவர்தான் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதாக நான் கூறும் சுற்றுசுவரா என்றால் அதுகுறித்து தெரியவில்லை. புகைபடம் எந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள சுற்றுசுவர் என்று எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிக்கும், எனக்கும் நான் சொத்து வாங்கியபோதுதான் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சொத்து வாங்கியபோது அளவுகள் சரியாகதான் இருந்தது. எனக்கும் பிரதிவாதிக்கும் சுற்றுசுவர் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டபோது அண்ணாமலை முதலியார், வேதாச்சலம், சுதாகர் ஆகியோர்கள் பஞ்சாயத்து பேச பிரதிவாதியிடம் சென்றார்களா என்றால் பேச சென்றார்கள். ஆனால் பிரதிவாதி பேச்சு வார்த்தைக்கு உட்படாமல் அவர்களை வெளியில் அனுப்பிவிட்டார். நான் சொல்லிதான் பஞ்சாயத்து பேச சென்றார்கள். தாவா எ-அட்டவணை சொத்தை நான் நேரடியாக பேசி கிரையம் பெற்றேன். கிரையம் பெற்றபோது பெருமாள் என்ற ஆசிரியர் நான் கிரையம் பெறுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தார்.

8) தாவா எ-அட்வணை சொத்தின் தெற்குபுற மதில் சுவர் கார்த்தி என்ற மருத்துவருக்கு சொந்தமானது என்றால் மேற்படி தெற்குபுறத்தில் அவரது மதில் சுவரும் மற்றும் மற்றொரு நபரின் மதில்சுவரும் வருகிறது அவரது பெயர் கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரைய பத்திரத்திலேயே எம்.ஜி.வேதபுரி என்பவரின் பெயர் ஜக்கபந்தியில் தெற்குபுறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கிரையம் பெற்றபோது அதிலிருந்த வீடு 43 வருடங்களுக்கு மேலாக உள்ள வீடு என்றால் சரிதான். அதைதான் நான் இடித்துவிட்டு கட்டினேன். நான் வீடு குடிபோன மாதம், வருடம் எனக்கு சரியாக நினைவு இல்லை. கிரகபிரவேசம் செய்த பத்திரிக்கை என்னிடம் உள்ளதா என்று நினைவு இல்லை. சோமசுந்தர

செட்டியார் உயிருடன் உள்ளாரா என்ற விவரத்தை அவரது வாரிசுகளிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் அவரது இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று இணைத்துள்ளேன். சோமசுந்தர செட்டியார் ஆசிரியராக பணிபுரிந்ததாக அவரது மகன்கள் என்னிடம் கூறினார்கள்.என் தாவாவில் சொத்து விவரத்தில் பி-அட்டவணை சொத்து குறித்து குறிப்பிட்டுள்ளேன். அந்த சொத்து விவரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. சோமசுந்தர செட்டியார் வாரிசுள் எங்கு வசிக்கிறார்கள் என்று எனக்கு தெரியும். அந்த வீட்டில் அவர்கள் வசித்தார்களா என்றால் வெகுநாட்களுக்கு முன்பாக அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறிவிட்டார்கள் அந்த வீட்டில் சோமசுந்தர செட்டியார் மனைவி மட்டும்தான் வசித்தார். சோமசுந்தர செட்டியாரின் வாரிசுகள் அந்த வீட்டில் வசிக்கவில்லை என்றும் வெளியூரில் வசித்ததாகதான் எனக்கு தகவல் அளித்தார்கள்.மேற்படி நான் கிரையம் பெற்ற வீட்டில் சோமசுந்தர செட்டியார் வாரிசுகள் ஆசரியர்கள் மற்றும் மாணவர்களுக்க வாடகைக்கு விட்டு அந்த வாடகை பணத்தை பெற்றுவந்தார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

9) தாவா மாதிரி வரைபடத்தில் தாவா எ மற்றும் பி அட்டவணை சொத்து குறித்து சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.அட்டவணை ஆக்கிரமிப்பு பகுதி என அதில் குறிப்பிட்டுள்ளோம். தாவா மாதிரி வரைபடத்தில் ஆக்கிரமிப்பு பகுதியாக கிழக்கு மேற்கு 4 அடியும், வடக்கு தெற்கு 80.8 அடியாகவும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் தாவா பி அட்டவணை சொத்து அளவு குறைவாக உள்ளதால் மதிப்பிட இயலாது என குறிப்பிட்டு 1 சதுர அடி ரூ.50/-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா எ-அட்டவணை சொத்தின் மதிப்பு ரூ.30,20,000/-ம் என வா.சா.ஆ.1 ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது நான் வாங்கிய கல்லால் ஆன வீடு மற்றும்

அடிமனையின் மதிப்பு. நான் இடம் வாங்கிய பிறகு அதில் இருந்த வீட்டை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டியுள்ளதன் மதிப்பு குறித்து எனது பிராதில் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை.

10) நான் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அல்லது பின்பு வாங்கி பார்த்தேனா என்றால் பிரச்சனை ஏற்பட்டபோது ஆவணங்களை வாங்கி நான் சரிபார்த்தேன். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்புவதற்கு முன்பு பிரதிவாதி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டாரா என்றால் எனக்கு அதுகுறித்து சரியாக நினைவு இல்லை. 30.10.2018 அன்று வழக்கறிஞர் அறிவிப்பை நான் அனுப்புவதற்கு முன்பு பிரதிவாதி என்மீது வழக்கு தொடுத்திருந்த விவரம் எனக்கு தெரியும். அசல் வழக்கு எண்.224/2018 என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் என்மீது பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் வழக்கு விவரங்கள் குறிப்பிட்டு தவறான வழக்கு என்று நான் எதுவும் குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பவில்லையென்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்மீது சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் வழக்கு விவரங்களை மறைத்து ஆவணங்களை புனைந்து நான் பிரதிவாதிமீது இந்நீதிமன்றத்தில் தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்கனவே பஞ்சாயத்து செய்த அண்ணாமலை, வேதாச்சலம், சுதாகர், பெருமாள் ஆகியோர்கள் பிரதிவாதியிடம் சொத்து வாதியின் சொத்து அதை விட்டு கொடுத்துவிடுங்கள் என்று கூறியும் பிரதிவாதி ஏற்காததால் அதன்மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு நான் இவ்வழக்கு பிரதிவாதிமீது தவறான இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கிரையதாரர் சோமசுந்தர செட்டியார் தவறான் அளவுகள் குறித்து கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், அதன் அடிப்படையில் நான் சுற்றுசுவர் அமைத்துவிட்டேன் என்றும் அதனால் என் பகுதியில் வரும் பிரதிவாதியின் இடத்தை விட்டு

கொடுக்கச்சொல்லி நான் கேட்டுக்கொண்டும் பிரதிவாதி ஒப்புகொள்ளாததால் அவர்மீது எனக்கு ஏற்பட்டுள்ள காழ்ப்புணச்சி காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

11) மேற்படி கிரையதாரர் தவறான அளவுகள் குறித்து குறிப்பிட்டு சுற்றுசுவர் எழுப்பியுள்ளதால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் பிரதிவாதிதான் சுற்றுசுவரை இடித்துள்ளார். மேற்படி எங்களுக்குள் பஞ்சாயத்து செய்த நபரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் பிரதிவாதிக்கு தேவைப்பட்டால் அவர் சாட்சியாக விசாரிக்கட்டும். நான் எனது தாவாவில் மதில் சுவரின் அளவு குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் பிரதிவாதிதான் மதில் சுவரை இடித்து அப்புறபடுத்திவிட்டார். தாவா சொத்து கிழக்கு மேற்கு முகப்பு அகலம் 39 அடி என்றால் சரிதான். மேற்படி கிழக்குபுறம் சுற்றுசுவர் உள்ளதா என்றால் ஏற்கனவே இருந்த பழைய சுற்றுசுவரை பிரதிவாதி இடித்துவிட்டு எனது இடத்தில் சுற்றுசுவர் கட்டியுள்ளார். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை விவரம் குறித்து எனக்கு தெரியும். தாவா சொத்தை ஆணையர் பார்வையிட்டபோது புகைபடம் எடுத்தாரா என்று எனக்கு தெரியவில்லை. என்னுடைய சொத்து முகப்பு தோற்றம் மற்றும் சுற்றுசுவர் அளந்தபோது 9.2 மீட்டராக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் அது சரியா என்றால் வழக்கறிஞர் ஆணையர் அளவை தவறாக குறிப்பிட்டுள்ளார். வழக்கறிஞர் ஆணையர் சரியான அளவுகள் குறிப்பிட்டுள்ளார் என்றும் எனக்கு சரியாக நிள அளவுகள் தெரியாததால் பிரதிவாதியிடம் தகராறு செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கிழக்கு மேற்கு அகலம் 39 1/2 அடி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வடபுறம் 11.8 மீட்டர் அல்லது 39 அடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் தென்புறம் 33 1/2 அடி என குறிப்பிடப்பட்டுள்ளதா

என்றால் தென்புறம் 10.2 மீட்டர் அல்லது 33 1/2 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் புலத்தில் உள்ள சொத்தை முறைபடி அளவீடு செய்யாமல் கிரைய பத்திரத்தில் உள்ள அளவுகள் குறிப்பிட்டு தற்போது உரிமை கொண்டாடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கிரையதாரர் வீடுதான் அந்த இடத்தின் அடையாளமாக இருந்தது என்றும் அதை அனுசரித்துதான் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றும் நான் கிரையம் பெற்றபோது முறையாக அளக்காமல் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பொருளாதாரத்தில் நலிவு அடைந்தவர் என்றும் நான் அவரை மேலும் நலிவு அடைய செய்ய முயற்சிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஒரு வழக்கில் உண்மை சங்கதிகளை மறைத்து தவறான வியாஜியமூலத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பதால் என்னுடைய தாவா தள்ளுபடிக்குறியது என்று சொன்னால் சரியல்ல.